[29th July 1965

SRI M. S. SELVARAJAN : Is it not fact that there was a list of reserve tanks to be included in the Manimuthar scheme? May I know what happened to that list?

THE HON. SRI V. RAMAIAH : There is a list and the list is under consideration of the Government.

New Channel from Kattumailur anicut

* 27 *Q.*—SRI K. NARAYANASWAMY PILLAI : Will the Hon. the Minister for Food be pleased to state whether there is any proposal for the formation of a new channel from the Kattumailur anicut with a view to irrigating the lands in Naraiyur, Nallur, Kandappangurichi. T. Podaiyur, Maduravalli, Sirumangalam and Mannambadi villages in Vridhachalam taluk?

THE HON. SRI V. RAMAIAH : There is no such proposal at present.

சாத்தனூர், வீடூர் நீர்த்தேக்கங்களை இணைத்தல்

* 28 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :
திரு. ஆ. தங்கவேலு : } கனம்

உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சாத்தனூர் நீர்த் தேக்கத்திலிருந்து வீடூர் நீர்தேக்கத்திற்குத் தண்ணீர் விடும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது "இல்லை" என்றார்களே, இல்லை என்பது நிரந்தரமானதா ? அல்லது திரும்பவும் முயற்சி எடுத்தால் நடக்கக் கூடுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்போது இல்லை என்று சொன்னேன். ஆகவே இனிமேல் முயற்சி எடுத்தால் அப்புறம் பார்க்க வேண்டும்.

திரு. ஆ. தங்கவேலு : வீடூர் நீர்த் தேக்கத்தின் கொள்ளளவை அதிகப்படுத்தும் திட்டம் ஏதேனும் இருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.